**<u>சார்பு நீதிமன்றம், மேலூர்</u>**

**<u>11.06.2024</u>**

**<u>OS. No.76/2019</u>**

**<u>வா.சா.1 - கழுவாயி, க-பெ.ராமசாமி ஆசாரி</u>**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

**(சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறார்.)**

என் அப்பா பெயர் கோபால் என்ற ஆண்டி ஆசாரி என்றால் சரிதான். என் அப்பா கோபால் என்ற ஆண்டி ஆசாரிக்கு ஜெயராஜ், பெருமாள், கந்தசாமி என்ற மூன்று மகன்களும், கழுவாயி ஆகிய நான், சரோஜா, பாப்பு அம்மாள், பாக்கியம் ஆகிய நான்கு மகள்களும் வாரிசுகள் என்றால் சரிதான். கடந்த 11.10.1989ம் தேதியிட்டு வழக்குச் சொத்தைப் பொறுத்து என் அப்பா மற்றும் என் மூன்று சகோதரர்களும் ஒரு தரப்பினர்களாகவும், நானும் என் உடன் பிறந்த சகோதரிகள் ஒரு தரப்பினர்களாகவும் உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரிதான். அது பதிவு செய்யப்படாத பாகம் தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் என் தங்கை சரோஜா கையெழுத்திடவில்லை என்றால் சரிதான். என் அம்மா பொன்னம்மாள் என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தத்தில் என் தாயார் பொன்னம்மாள் பெயரில் உள்ள நிலத்தையும், என் தகப்பனார் பெயரில் உள்ள வழக்கிடைச் சொத்தையும், எங்கள் நான்கு சகோதாரிகளுக்கும் கிரையம் செய்து கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரைய ஒப்பந்தத்தில் மொத்த கிரையத் தொகை ஒரு லட்சம் என்று முடிவு செய்து, வழக்கறிஞர் வி.எஸ்.ராமசுப்பிரமணியத்திற்கு முப்பதாயிரம் கொடுத்து விடவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் மீதி உள்ள எழுபதாயிரம் பங்குனி மாதம் 30-ம் தேதிக்குள் கட்டி, அதனடிப்படையில் என் தந்தையும், என் சகோதரர்களும் சேர்ந்து, கிரையம் எழுதிக் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கறிஞருக்கு முப்பதாயிரம் கொடுத்து விட்டோம். அதற்கு ஆவணம் எதுவும் வாங்கவில்லை. அதைப்பற்றி வழக்குரையிலும் தெரிவிக்கவில்லை. மீதி உள்ள எழுபதாயிரம் தொகையை என் தந்தை அல்லது என் சகோதரர்களிடம் கொடுக்க சகோதரிகளான நாங்கள் முற்பட்டோமா என்றால் இல்லை. யார் கிரைய பத்திரம் ஏற்படுத்த முற்படவில்லையோ, அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்றும், மேற்படி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்

சரிதான். மேற்படி ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில், என் தந்தையிடமோ, அல்லது சகோதரர்களிடமோ, கிரையம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. வாசா.ஆ.5 ஆவணம் காலாவதியாகிவிட்ட நிலையில், அதன்படி எவ்வித நடவடிக்கையும் எங்களால் எடுக்க இயலாது என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை கோரிதான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்குச் சொத்தை அபகரிக்கும் நோக்கத்தோடு, ஒப்பந்தத்தில் உள்ள விபரங்களை மறைத்து நானும், என் சகோதரி சரோஜாவும் பாகப்பிரிவினைக்காக வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என் தந்தை உயிருடன் இருக்கும் போது, வழக்குச் சொத்து அவருக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்பதால், கடந்த 13.12.1989ம் தேதியிட்டு, தகுந்த பிரதிபலன் பெற்றுக் கொண்டு, 3ம் பிரதிவாதியான இறந்த கணேசனுக்கு பதிவு பெற்ற கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் கிராமத்தில் எழுதிய ஒப்பந்தத்திற்குப் பின்னர் தான் அவ்வாறு எழுதி வாங்கியுள்ளார்கள். கணேசன் கிரையம் பெற்ற பின்னர் வழக்குச் சொத்தைப் பொறுத்து வருவாய்த்துறை ஆவணங்கள் அனைத்தும் அவர் பெயரில் மாற்றப்பட்டது என்றும், அவர் 12 ஆண்டு காலத்திற்கும் மேலாக அனுபவித்து வந்ததால், அவருக்கு எதிரிடை அனுபவ பாத்தியம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தை கிரையம் பெற்ற பின்னர் 3ம் பிரதிவாதி கணேசன் இரண்டு பிளாட்டுகளாக பிரித்து, பிளாட் எண்.26-ஐ கடந்த 28.01.2013ம் தேதியிட்டு, பதிவு பெற்ற தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் 4ம் பிரதிவாதி உஷாவிற்கு பாத்தியப்படுத்தியுள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணமானது எழுதிய காலம் முதல் நடைமுறைக்கு வந்து, வருவாய்த்துறை ஆவணங்கள் அனைத்தும் உஷாவின் பெயரில் மாற்றப்பட்டு, அவர் தனித்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. மற்றொரு பிளாட் எண்.25-ஐ வனிதாவின் கணவர் 8ம் பிரதிவாதி ரவிக்குமாரிடம் தகுந்த பிரதிபலனுக்கு அதே தேதியான 28.01.2013 தேதியிட்டு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றும், அதை தொடர்ந்து வருவாய்த்துறை ஆவணங்கள் அனைத்தும் 8ம் பிரதிவாதி ரவிக்குமார் பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி தான செட்டில்மெண்ட் மற்றும் 8ம் பிரதிவாதி பெயருக்கு ஏற்பட்ட கிரைய ஆவணம் பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.5 ஒப்பந்தத்தின் அடிப்படையில் உள்ள விபரங்களை மறைத்து தற்போது வழக்குச்

சொத்தின் மீது பாகம் கோரி வருகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு எங்களுக்கு எந்த வித உரிமையும் கிடையாது என்றும், அதனால் எனக்கு வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்று என்றால் சரியல்ல. என் தந்தை காலமாகி, சுமார் 7, 8 ஆண்டுகள் ஆகிறது. மேற்படி தானசெட்டில்மெண்ட் மற்றும் கிரைய ஆவணம் செல்லாது என்று பரிகாரம் இந்த வழக்கில் கோரியுள்ளோமா என்றால் இல்லை. நான் சுயலாபம் அடைய வேண்டும் என்று கருதி, பின் யோசனையுடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>நீதிமன்ற கேள்வி</u>

எனக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 1960ம் ஆண்டு நடைபெற்றது.

ஒப்பம்-எம்.சாமுண்டீஸ்வரி பிரபா
சார்பு நீதிபதி
மேலூர்.